www.publicvigilancecounciltn.org

தாய் மண்ணே வணக்கம்! தமிழ் மண்ணே வணக்கம்!!

மலர் - 16
இதழ் - 1
ஜனவரி-2017
விலை ரூ.7/-


KANKANIPPAALAN

# கண்காணிப்பாளன்

kkpnmagazine@gmail.com

மாதஇதழ்

## அறிஞர் அண்ணாவின் நினைவலைகள்....





## காரைக்குடிக்கு பெருமை சேர்க்கும் தமிழ்த்தாய் கோவில்

## தை பிறந்தால் வழி பிறக்கும்



# ஆலோசனைக் கூட்டம்





















கடந்த 18.12.2016 அன்று பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு அமைப்பின் முப்பெரும் விழா குறித்து ஆலோசனைக் கூட்டம் பெரம்பூர் கல்கி ரங்கநாத மான்போர்டு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. அமைப்பின் தலைவர் எஸ். மோகன் தலைமை தாங்கினார். நிறுவனப் பொதுச் செயலாளர் இ.செல்வராஜ் மற்றும் சட்ட ஆலோசகர்கள் எம். தாமோதரன், பூவை இல.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் கர்னல் டி. ஜெயராஜ், வழக்கறிஞர் பொன்னுரங்கம், வழக்கறிஞர் சுஜாதா, தாசில்தார் (ஓய்வு) எம்.டி. இளங்கோவன், எம். பழனி, எஸ். முகம்மது ரபீக், கே.எஸ். கணேஷ், சி.வி. ஆனந்தகுமார், ஆனந்து ஆறுமுகம், இராமேஸ்வரம் சேகர், திருவள்ளூர் விஜய குமார், பாலசுப்பிரமணியம், டி.கே. ஜோதி பிரியன், துளசி பன்னீர்செல்வம், பரமேஸ்வரி, முருகன், சதக்குல்லா செரிப் பி.என்.ராஜா, கே.அய்யனார், பி.கே.குமார் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மறைந்த தமிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் பரமசிவம் இரங்கல் அஞ்சலி வாசித்தார்.



# தை பிறந்தால் வழி பிறக்கும்

தமிழர் தம் உள்ளத்தில் மகிழ்ச்சி ததும்ப கொண்டாடும் நன்னாள் - பொங்கல். புதுப்பானையை பூ, மஞ்சள், கரும்பால் அலங்கரித்து, பொங்கலிட்டு, அது பொங்கி வரும் போது "பொங்கலோ பொங்கல்" என்று கூறி ஆனந்தம் அடைவதற்கு ஈடு இணை எதுவும் இல்லை.

பொங்கல் திருநாள் வானியலை அடிப்படையாகக் கொண்டது. வான் மண்டலத்தில் தலைவனாக இருப்பது சூரியன். ஒவ்வொரு மாதமும் சூரியன் ஒவ்வொரு ராசியில் சஞ்சரிக்கிறது.

நவக்கிரகங்களின் பிரதான நாயகரான சூரிய பகவான் மாதம் மாதம் மாறிக் கொண்டே வரும் போது, தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு வரும் புண்ணிய தினத்தையே பொங்கல் திருநாள் என்கிறோம்.

மகர ராசிக்கு சூரியன் வரும் போது மட்டும் ஏன் இவ்வளவு சிறப்பு பெறுகிறது தெரியுமா?

சூரியனை சுற்றி வலம் வரும் 8 கிரகங்களும் சூரியனின் ஆகர்ஷனை ஈர்ப்பு சக்திக்கு உட்பட்டே இயங்கி வருகின்றன. அந்த வகையில் சூரியன் தன் நட்பு வீடான தனுசு ராசியில் இருந்து பகை வீடான மகர ராசிக்கு வரும்போது பூமியில் வாழும் மக்களிடம் பல்வேறு மாறுதல்களை ஏற்படுத்தும்.

இதை கருத்தில் கொண்டுதான் "தை பிறந்தல் வழி பிறக்கும்" என்று சொல்கிறார்கள்.

பூமியின் ஒரு வருடம், ஆறு ஆறு மாதங்களாக வகுக்கப்பட்டு, அது உத்தராயணம், தட்சிணாயணம் என்று அழைக்கப்படுகிறது. தேவர்களுக்கு உத்தராயண காலம் பகலாகவும் தட்சிணாயண காலம் இரவாகவும் இருக்கும்.

உத்தராயணத்தின் முதல் நாள் அதாவது தை மாதத்தின் முதல் நாள் தேவர்கள் உலகிற்கு சூரியோதயமாக அமைகிறது. அன்றைய தினம் சொர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படுவதாக நமது மகிரிஷிகள் கூறி உள்ளனர். அந்த புனித தினமே பொங்கல் திருவிழாவாக மாறியதாக பண்டைய நூல்கள் குறிப்பிட்டுள்ளன.

தொடர்ச்சி 6ஆம் பக்கம்

# வாஸ்து சாஸ்திரம்

நமது முன்னோர்கள் வாசல் படிகள் மாடிப்படி போன்றவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வாஸ்து முறைப்படி அமைத்துள்ளார்கள். ஏனெனில் ஒரு வீட்டிற்கு அலுவலகத்திற்கு ஏற்றம் லாபம் தரக்கூடியவை படிகளின் கணக்கே.

ஒவ்வொரு கட்டிடத்திற்கும் முன்னால் உள்ளே நுழைவதற்கு படிகளே முதலில் முக்கியத்துவம் பெற்று அவை வாஸ்து முறைப்படி ஒற்றைப்படை எண்ணிக்கையில் வருமாறு அமைக்கப்பெற்றுள்ளன.



மாடிப்படி பற்றி இந்த இதழில்

தரைத்தளத்திலிருந்து மேல் தளத்திற்குச் செல்ல மாடிப்படி அமைக்கப்படுகிறது. அவ்வாறு அமைக்கப்பெறும் படிகள்

1. வடகிழக்கு என்று சொல்லக்கூடிய ஈசான்யத்தில் இருத்தல் கூடாது.

2. மடக்குப்படி : தென்மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கில் அமைத்துக்கொள்ளலாம்.

3. வடகிழக்கில் மாடி படி இருந்தால் அந்த வீட்டு குழந்தைகள் மந்தமாகவும் திக்கி பேசும் தன்மை கொண்டதாகவும் இருக்கும்.

கன்னிமூலை என்ற சொல்லக்கூடிய தென்மேற்கில் மாடிப்படி அமைத்து, அதே மூலையில் வீட்டிற்கு தலைவாசல் வைத்தல் முற்றிலும் தவறு. அவ்வாறு செய்தால், அவை பொருளாதார ஏற்ற தாழ்வுகளை ஏற்படுத்தும்.

கிழக்கு பார்த்த வீட்டில் சாத்துப்படி இருந்து, ஈசான்யத்தில் ஆரம்பித்து வாயு மூலைக்கு சற்று தள்ளி முடிந்தால் நல்ல பலன்களை தரும்.

மேற்கு பார்த்த வீட்டிற்கு வாயு மூலையில் ஆரம்பித்து கன்னி மூலைக்கு முன்னதாக முடிக்க வேண்டும்.

தெற்கு பார்த்த வீட்டிற்கு அக்னி மூலை என்று சொல்லக்கூடிய



Er. G. செந்தில்குமார்
ஸ்ரீராகவேந்திரா பில்டர்ஸ்
புதுக்கோட்டை,
செல் : 9443401807

தென்கிழக்கே ஆரம்பித்து கன்னி மூலை தள்ளி படி முடிவது போல் இருந்தால் உடல் ஆரோக்கியம் ஏற்படும்.

### திசை பலன்கள்

மாடிப்படி தென்மேற்கில் இருந்தால் பணம் குவியும்.

கிழக்கில் அமைந்தால் சூரிய வெளிச்சம் தடைபடும். குழந்தைகளின் படிப்பு வளர்ச்சி பாதிப்படையும்.

வடக்குப் பக்கம் - உடல் அசௌகரியத்தை கொடுக்கும்.

மேற்கே இருந்தால் உயர்ந்த எண்ணங்கள் கொடுக்கும்.

மாடிப்படி மேற்காக ஏறி கிழக்காக திரும்பினால், குடும்பத்தில் நல்ல ஆரோக்கியம் கூடும்.

மாடிப் படி தெற்காக ஏறி வடக்காக வரும்படி அமைத்தால் பொன் பொருள் சேரும். வரக்கூடிய 2017 ம் ஆண்டு ஹேவிளம்பி ஆண்டு

அனைவருக்கும் இனிய புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள். இந்த புத்தாண்டு இறைவன் அருளால் உலகிற்கு அனைத்து விதத்திலும் ஏற்றம் தரக்கூடிய ஆண்டாக விவசாயத்திலும், மற்ற துறைகளிலும் நல்ல மேண்மை தரும் ஆண்டாக அமைய என் குரு ஸ்ரீஸ்ரீ ராகவேந்திரஸ்வாமியின் பாதம் பணிந்து பிரார்த்திக்கினறேன்.

**வாழ்க வையகம், வாழ்க வளமுடன்**

## நுகர்வோர் வழக்கு தொடர தேவையான முன் நடவடிக்கைகள்

நாம் ஒரு கடைக்குப்போய் ஒரு பொருள் வாங்குகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அதன் பாக்கிங்கில் போடப்பட்ட விலைக்கு அதிகமாக பணம் வாங்கினாலோ, எடை மற்றும் அளவு குறைவாக இருந்தாலோ அல்லது தரம் குறைவாக இருந்தாலோ உடனடி யாக அதைப் பற்றி கடைக்காரிடம் சுட்டிக்காட்டுங்கள்.

அவர் தவறை சரி செய்ய மறுத் தால், அவருக்கு நீங்களே, குறைபாடு களை சுட்டிக்காட்டி அதை சரி செய்யா விட்டால் நுகர்வோர் வழக்கு தொடரப் படும் என அத்தாட்சியுடன் கூடிய பதிவு தபாலில் நோட்டீஸ் அனுப்புங்கள்.

அவருக்கு நோட்டீஸ் பட்டு வாடா செய்யப்பட்டுள்ளது என்பதற் கான ஆதாரத்தை நோட்டீஸ் காப்பியு டன் வைத்துக் கொள்ளுங்கள். அதைப் போலவே பொருள் வாங்கியதற்கான ரசீதும் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

விலை சம்பந்தப்பட்ட பிரச் சனை என்றால், விலை அச்சடிக்கப்பட்ட பாக்கிங் கவரை பத்திரமாக வைத்தி ருங்கள். தரம் சம்பந்த பிரச்சனை என் றால் அதே பாக்கிங் கவருடன் பொருளை பாக் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

எடை சம்பந்தப்பட்ட பிரச்சனை என்றால், நீங்கள் பாக்கிங்கை பிரிப்பதற்கு முன்பே எடை ஏறைவு என்பதை ஊர்ஜிதம் செய்துவிட்டு பாக் கிங்கை பிரிக்காமல் இருக்க வேண்டும். ஒரு வேளை பிரித்துவிட்ட பின்பு தான் எடை குறைவை கண்டு பிடித்தீர்கள் என்றால், பிரிக்கப்பட்ட பாக்கிங்கை ஆதாரமாக வைத்து வழக்கு தொடர முடியாது. எனவே மறுபடியும் அதே கடைக்கு போய், அதே பொருளை, பின் போட்டு வாங்கிக் கொள்ளுங்கள்.

இப்பொழுது சேவை சம்பந்தப் பட்ட பிரச்சனை என்றால், சேவைக் கான ரசீது இருக்க வேண்டும். முன்பு குறிப் பிட்ட படியே சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட் டீஸ் அனுப்புங்கள். எல்லா அத்தாட்சிக ளையும் பத்திரமாக வைத்துக் கொள்ளுங் கள்.

### நுகர்வோர் விழிப்புணர்வு

நாட்டில் நுகர்வோர் பாது காப்புக் கென தனி சட்டத்தை 1986 ல் நாடாளு மன்றம் இயற்றியது. ஆனாலும், 1990 க்கு பின்பே பல மாநிலங்களில் முழு அளவில் நுகர்வோர் நீதிமன்றங்கள் செயல்படத் துவங்கின. மக்களுக்கும் நுகர்வோர் சட்டத்தை அறிந்து கொள் ளும் ஆர்வமும், அதை பயன்படுத்தும் எண்ணமும் ஏற்பட்டன., தற்போது, நுகர்வோர் பாது காப்பு சட்டத்தை போல் தகவல் உரிமை சட்டமும் மக்களின் விழிப் புணர்வை அதிகரிக்கச் செய்துள்ளது என்றால் மிகையாகாது.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் டாக்டர்கள் உள்பட சில தரப்பினரை கொண்டு வருவதில் உள்ள சர்ச்சை இன்னும் ஓயவில்லை. இதற்கிடையே, பல் வேறு சேவைகளிலும் உள்ள குறைபாடுக ளுக்கு நுகர்வோர் நீதிமன்றங் களை அணுகுவதில் மக்களின் விழிப்புணர்வு அதிகரித்துள்ளதை காண முடிகிறது.

3ஆம் பக்கத் தொடர்ச்சி

தமிழகத்தின் பெருமையும் புகழும் உச்ச நிலையில் விளங்கிய போது, பூம்புகாரில் ஆண்டுதோறும் இந்திர விழா கோலாகலமாக நடந்ததை சிலப்பதிகாரம் அற்புதமாக விவரித்துச் சொல்கிறது. இந்த இந்திர விழாவே பிற்காலத்தில் பொங்கல் திருவிழாவாக மாறியது என்று சான்றோர்கள் சொல்கிறார்கள்.

பொங்கல் தினத்தின்று நாம் சூரிய பகவானை வழிபடும் போது மறக்காமல் நாம் பித்ருக்களையும் வணங்க வேண்டும்.

மறைந்த நம் முன்னோர்களுக்கு நாம் அளிக்கும் பூஜை, உணவு, தண்ணீர் ஆகியவற்றை சூரிய பகவான் தன் அளவற்ற சக்தியினால் ஏற்று அதை பித்ரு வழிபடும் போது, அவர்கள் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்து நம்மை ஆசீர்வதிப்பதாக பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன. எனவேதான் பொங்கல் படைத்த சூரியனை வழிபடும் போது நம் பித்ருக்களையும் மறக்காமல் வழிபட வேண்டும்.


PUBLIC VIGILENCE COUNCIL TAMILNADU

**பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு**

தலைவர் **லயன் எஸ்.மோகன்** B.A,B.L.

செல் : 81220 66228, 94440 66228

நிறுவனர் / செயலாளர் : **இ.செல்வராஜ்,**

செல் : 94444 06321, 98841 99387,

**80, கோனிகா காம்ப்ளக்ஸ் 2வது மாடி, தம்புசெட்டி தெரு, சென்னை - 1**


## விலைமதிப்பில்லாத உயிரை பாதுகாத்துக் கொள்ளுங்கள்!

நீங்கள் குளிர்ந்த தண்ணீர் குடிக்கும் பிரியரா?

அப்படியென்றால் இது உங்களுக்குத்தான் உங்களுக்காக.. உங்களின் விலைமதிப்பற்ற இரண்டு நிமிடங்களை செலவழித்து இதை கண்டிப்பாக படிக்கவும்

மாரடைப்பு மற்றும் சூடான குடிநீர்: சீன மற்றும் ஜப்பான் மக்கள் தங்களின் உணவிற்கு பிறகு குளிர்ந்த தண்ணீரை விடுத்து சூடான தேநீர் அருந்துவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இப்பழக்கத்தை நாமும் பின்பற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது.

சாப்பிட்டவுடன் குளிர்ந்த நீர் குடிப்பதனால், நம் உணவில் உட்கொண்ட எண்ணெய் பொருட்கள் திடப்பொருளாக மாறி செரிமானத்தை மெதுவாக்கி விடும். திடப்பொருளாக மாறிய கலவை நம் வயிற்றில் இருக்கும் அமிலத்தோடு வினைபுரியும்.

இது திட உணவை விட வேகமாக உடைந்து குடலால் உறிஞ்சபடும். இது நம் குடலில் அணிதிரண்டு அப்படியே நின்றுவிடும். மிக விரைவில், இது கொழுப்புகளாக மாறி புற்றுநோய்க்கு வழிவகுக்கும். ஆகவே உணவிற்கு பிறகு சூடான தண்ணீர் அல்லது சூப் குடிப்பது நல்லது.

மாரடைப்பு பற்றி ஒரு குறிப்பு: மாரடைப்பின் முதல் அறிகுறி இடது கையில் ஏற்படும் கடுமையான வலி ஆகும். தாடையில் தீவிர வலி ஏற்பட்டாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மாரடைப்பு வரும்போது பொதுவாக நெஞ்சு வலி ஏற்படாது. குமட்டல் மற்றும் கடுமையான வியர்வையே மாரடைப்பு ஏற்பட பொதுவான அறிகுறிகள் ஆகும்.

# PUBLIC VIGILENCE COUNCIL TAMILNADU

## பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு

## ஆக்கப்பணிகளும் முக்கிய நோக்கங்களும்

1. காவல் துறையுடன் இணைந்து இரவு ரோந்துப்பணி, போக்குவரத்து சீரமைப்புப் பணி, ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்,
2. திருவிழாக்களின் போது காவல் துறையுடன் இணைந்து பாது காப்புப் பணியில் ஈடுபடுவது.
3. விழாக்காலங்களில் பக்தர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வரிசைப்படுத்தி, போக்குவரத்துச் சீரமைத்து இலவசமாகத் தண்ணீர் பாக்கட்டுகள், அன்னதானம் வழங்குதல்.
4. மாவட்டம் முழுவதும் கள்ளச்சாரயத்தை முற்றிலும் ஒழிப்பதற்குப் பிரச்சாரம் செய்தல்.
5. தேர்தல் நேரங்களில் மாவட்டம் முழுவதும் தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுதல்.
6. சுதந்திரதினம், குடியரசுதினம் போன்ற தேசிய நிகழ்ச்சிகளில், தேச விரோதிகளை அடையாளம் கண்டறிந்து, விபத்தினைத் தடுக்கவும், பொது மக்களிடையே அறிக்கை, விளம்பரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
7. குற்றங்களைத் தடுக்கவும், போக்குவரத்து விபத்தினைத் தடுக்கவும், பொது மக்களிடையே அறிக்கை, விளம்பரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
8. பெண்களைக் கேலி, கிண்டல் செய்தவர்களைக் கண்காணித்து அவர்களை நல்வழிப்படுத்துதல்.
9. இரவு நேர போக்குவரத்து விபத்தினைத் தடுக்க வாகன முகப்பு விளக்கின் மீது கருப்பு வண்ணம் பூசுதல்.
10. பண்டிகைகளின்போது விபத்துக்களைத் தடுக்க பொதுமக்களிடையே பத்தி ரிக்கை விளம்பரம், தொலைக்காட்சி மூலம், விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
11. போலியோ சொட்டுமருந்து முகாமை முன்னின்று நடத்துதல்.
12. அனைத்து பள்ளிகள், கல்லூரிகளில் போதை ஒழிப்பு விழிப்பு ணர்வு முகாம் நடத்துவதுடன், அதன் தீமைகளைக் குறித்து பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி நடத்தி ஊக்குவித்து, பரிசுகள் மற்றும் சான்றிதழ் களை வழங்குதல்.
13. பொதுமக்களிடையே தற்காப்பிற்காக இலவசமாக கராத்தே பயிற்சி, யோகா பயிற்சி அளித்தல்.
14. பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி அளித்து அரசு உதவிபெற ஆலோசனை வழங்குதல்.
15. படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு, கணினியுடன் அனைத்து சுயதொழில் பயிற்சி அளித்து சுய வேலைவாய்ப்பு தொழில் தொடங்க ஆலோசனை வழங்குதல்.
16. சுற்றுப்புற சூழல், சுகாதாரம் போன்றவைகளையும் இவற்றினால் ஏற்படக்கூடிய நன்மைகளையும், தீமைகளையும் பொது மக்களுக்கு எடுத்துரைத்தல்.
17. மருத்துவ வசதிகள் இல்லாத கிராமம் மற்றும் நகர்புறங்களில் மருத்துவ முகாம் நடத்தி கூடுமானவரையில் இலவசமாக மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்துகள் வழங்குதல்.
18. ஏழை – எளிய ஆதரவற்ற குழந்தைகளுக்கு படிக்க உதவி செய்தல்.
19. வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற மக்களையும், தீ விபத்தினால் பாதிக்கப்படுகின்றவர்களையும் காவல் துறை மற்றும் தீ அணைப்பு துறையுடன் இணைந்து காப்பாற்றி உதவி புரிதல்.
20. விதவைகளின் மறுவாழ்விற்கும் அவர்களின் முன்னேற்றத் திற்கும் உதவி புரிதல்.
21. குடும்ப நல திட்டத்தையும், வரதட்சணை ஒழிப்பு திட்டத் தையும் தீவிரமாக அமல் செய்து மக்கள் நலம்பெற உதவி செய்தல்.
22. கண்தானம், ரத்ததானம் போன்றவைகள் செய்தல் மற்றும் முகாம்கள் நடத்தி அதற்கான உறுப்பினர்களை சேர்க்கும் திட்டத்தை தீவிரப்படுத்தல்.
23. ஜாதிமத, இன வேறுபாடுகளை ஒழித்து மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல்.
24. ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவிகள் மற்றும் உடைகள் வழங்குதல்.
25. அத்தியாவசியப் பொருட்களை பதுக்கல் செய்வோரையும், உணவு பொருள்களின் கலப்படம் செய்வோரையும் அளவு களில் சரியான முறையில் விநியோகம் செய்யாதவர்களையும் கண்காணித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் காவல் துறைக்கும் தெரிவிப்பது.
26. நல்ல சமூக உறவாக மனித ஒற்றுமை, தேச ஒற்றுமை ஆகியவற் றிற்காக பாடுபடும் தலைவர்களையும், விளையாட்டு துறையில் வெற்றிபெறும் வீரர்களையும் கௌரவித்தல்.
27. மத்திய மாநில அரசுகள் மக்களுக்கு அறிவிக்கின்ற சலுகைகளை விளம்பரப்படுத்துதல்.
28. அரசு மருத்துவமனைகள் மற்றும் ரயில்வே ஸ்டேஷன் கூட்ட நெரிசல்களைக் கட்டுப்படுத்த உதவி புரிதல்.
29. செடி, மரக் கன்றுகள் வைத்து இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல்.
30. அரசு போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான இலவசப் பயிற்சி வகுப்புகளை நடத்தி ஆலோசனைகள் வழங்குதல்.
31. மாவட்ட விளையாட்டு சங்கத்துடன் இணைந்து விளை யாட்டை ஊக்குவித்து பரிசுகளை வழங்குதல்.
32. மழைநீர் சேகரிப்புக் குறித்து பிரச்சாரம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.



# மறைந்த முதல்வர் அவர்களுக்கு
# இரங்கல் செய்தி

தங்கத்தையும், வைரத்தையும் பூமியில் இருந்து தோண்டி எடுப்பார்கள்.

இங்கே மறைந்த முன்னாள் முதல்வர் மாமேதை அறிவுப் பெட்டகம், அறிஞர் அண்ணாவையும், தங்கத் தலைவர், பொன்மனச் செம்மல், எதையும் தாங்கும் இதயம், எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களையும், தமிழக மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட தங்கத்தாரகை, புரட்சித்தலைவி, பட்டை தீட்டப் பட்ட வைரம், அம்மா என அனைவராலும் ஏற்றுக்கொண்ட, நமது நெஞ்சங்களில் கலந்துவிட்ட அம்மா வையும் இதே மெரினா கடற்கரையில் விதைத்துவிட்டு இன்று மீளாத் துயரில் தவித்து வருகின்றோம்.

"தமிழக மக்கள் அனைவரையும் தன்மக்களாகவே கருதிய தன்னிகரில்லா கன்னித்தாய். ஆணாதிக்கம் மிக்க சமுதாயத்தில், தன்னம்பிக்கை, மன உறுதி, அறிவு, திறமை இவற்றின் மூலம் சாதித்துக்காட்டிய அரசியல் தலைவியாகத் திகழ்ந்தார். பலருக்குத் தேனாகத் தித்தித்தார். சிலருக்கு வேம்பாகக் கசந்தார். இன்னும் சிலருக்கு நெருப்பாகத் திகழ்ந்தார்.

ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகளுக்கு, மறைந்த முதல்வர் அம்மாவின் அயராத உழைப்பினையும், இன்னல்கள் பல வந்தாலும் அவற்றைத் துச்சமென எண்ணிப் பணியற்றிய பாங்கினையும் எடுத்துக் கூறி உருவாக்க வேண்டியது முதல் கடமையாகும்.

ஒவ்வொரு மேடைப் பேச்சின் போதும் அம்மா அவர்கள் கூறி வந்த கடைசி வார்த்தைகள், "அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க" எனக் கூறி முடிப்பார். நாம் தற்போது அத்துடன் "புரட்சித்தாயின் நாமம் வாழ்க" எனக் கூறி கண்ணீருடனும், கனத்த இதயத் துடனும் முடிப்பதோடு, அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு அமைப்பின் அனைவருடைய சார்பாக பிரார்த்திக்கின்றோம்.



பரமசிவன்


**கண்காணிப்பாளன்**

**மாத இதழ் ஆண்டு சந்தா மற்றும் நன்கொடையாக - 100/-**

**கண்காணிப்பாளன் மாத இதழுக்கு காசோலையாகவோ, அல்லது பணமாகவோ அனுப்பி சந்தாரார்களாக சேருங்கள்**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**எண். 352, சாமந்திப்பு காலனி, வியாசர்பாடி, சென்னை - 39**

# சங்கு முழங்கி சங்கநாத கின்னஸ் சாதனை



கடந்த 11.12.2016 அன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமதி . மோஹினி சரோஜ்விவேகானந்தா வித்யாலயா , ஜோதிநகர், திருவெற்றியூர். பள்ளியில் 1081 சங்கு முழங்கி சங்கநாத கின்னஸ் சாதனை முயற்சி நடைபெற்றது.

இக்கின்னஸ் சாதனை முயற்சியினை வடிவுடை மாணிக்கம் சங்கநாத அறக்கட்டளை ஏற்பாடு செய்தனர்.

இக்கின்னஸ் சாதனை முயற்சியில் கீழ்கண்ட பள்ளியின் மாணவர்கள் / அறக்கட்டளை சார்ந்தவர்கள் பங்கு கொண்டனர்.

1. வடிவுடைமாணிக்கம் சங்கநாத அறக்கட்டளை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள்.
2. ஸ்ரீமதி மோஹினி சரோஜ் விவேகானந்தா வித்யாலயா , ஜோதிநகர், திருவெற்றியூர்.
3. ஸ்ரீ நர்பதாதேவி ஜே.அகர்வால் விவேகானந்தா வித்யாலயா, வியாசர்பாடி.
4. கே.சி.டோஷிவால் விவேகானந்தா வித்யாலயா, மாத்தூர்.
5. இந்திரா விவேகானந்தா வித்யாலயா, ஓட்டேரி.
6. ஸ்ரீமதி கதூர்பா நிமச்சந் ஷா பி.முத்தையா செட்டி விவேகானந்தா வித்யாலயா, பெரம்பூர்
7. ஸ்ரீ சங்கர வித்யாலயா, திருவெற்றியூர்.
8. ஸ்ரீருக்மணி வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி. திருவெற்றியூர்.
9. கவிபாரதி வித்யாலயா, திருவெற்றியூர்.
10. வி . ஓ . சி . வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி, பெரம்பூர்
11. அவ்வை காப்பகம், டோல்கேட், புதுவண்ணாரப்பேட்டை.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.ஆர்.மகாதேவன் அவர்கள் கலந்து கொண்டார், கௌரவ விருந்தினர்களாக சிவத்திரு .மோகன்பாபு அவர்களும், திரு.வி.யுகேந்தர் (தாளாளர்), திருமதி. டி.எஸ்.லலிதா (முதல்வர்) - ஸ்ரீமதி மோஹினி சரோஜ் விவேகானந்தா வித்யாலயா).

மேலும் மேற்கண்ட அனைத்து பள்ளி தாளாளர்கள் ,முதல்வர்கள் மற்றும் ஆசிரிய பெருமக்களும் சிவனடியார்களுடன் சிறப்பு அழைப்பாளர்கள் பத்திரிகை நண்பர்கள் கலந்து கொண்டனர்.

இக்கின்னஸ் சாதனை சங்கு முழக்க சங்கநாத நிகழ்ச்சியினை திரு.பாலமுருகன் - தலைவர் , திருமதி. ஜெகசுந்தரி பாலமுருகன் - செயலாளர் (வடிவுடைமாணிக்கம் சங்கநாத அறக்கட்டளை) அவர்கள் வழிநடத்தினார்.

– பூபாலன்

# நடை பயிற்சி

கடலென செல்வம் இருந்தாலும்
உடல் நலம் நன்றாயக் காத்திடணும்
உணவை மருந்தாய் நினைத்திடனும்
உயிரின் மதிப்பினை உணர்ந்திடணும்

பணமே குறியெனப் பறக்கின்றோம்
பசியையும் கூட மறக்கின்றோம்
நிம்மதி இழந்து தவிக்கின்றோம்
நோயின் பிடியில் வீழ்கின்றோம்.

பருமனில்லாமல் நம் உடம்பைப்
பக்குவமாய் வைக்க தெரிஞ்சிடணும்
அளவாய் எதையும் வைத்திட்டால்
ஆயுளை நிச்சயம் கூட்டிடலாம்.

மருந்து மாத்திரையினை மட்டும்
மலையென நம்பிப் பயனில்லை
பாதி நோயினைத் தீர்த்தாலும்
மீதி நிவர்த்தி நம்மிடமே

உங்களை நம்பி வாழுகின்ற
உறவினைச் சற்று சிந்திப்பீர்
ஒருமணி நேரத்தினை மட்டும்
உறுப்படியாய்ச் செலவு செய்வீர்

நித்தமும் காலைப் பொழுதினிலே
நேரத்தை அவசியம் ஒதுக்கிடுவீர்
நிமிர்ந்து நேராய்க் கைவீசி
நெடிய தூரம் போய் வருவீர்

சீரான நடைப்பயிற்சி - நமக்குச்
சிறப்பான வாழ்வு தரும்
சோம்பலெல்லாம் தலைதெறித்தோடும்
சென்ற இளமை திரும்பி வரும்.

நித்திரையில் உயிர் மூச்சு
நிரந்தரமாய் விடைபெறுவதையும்
நீக்கி வைக்கும் நடைப்பயிற்சி
நினைவில் வைத்துப் பலனடைவீர்.


கவிப்போராளி **க.சுகுமாறன்**

**4031, பொன் நகர்,**
**அசோக் நகர் விரிவாக்கம்,**
**திருக்கட்டளை அஞ்சல்,**
**புதுக்கோட்டை – 622 303**
**செல்: 9443867387, 9486954801**





**கண்காணிப்பாளன்**

ஆசிரியர் : **இ.செல்வராஜ்**

முதன்மை காப்பாளர்
**P. ரேணுகோபால் I.A.S.** ஓய்வு

கௌரவ ஆசிரியர்
**M.D. இளங்கோவன்** தாசில்தார் ஓய்வு

மருத்துவ கௌரவ ஆலோசகர்
பேரா.டாக்டர் **முத்துச் செல்லக்குமார்**
M.D.,(Int. Med.) DPSM, Dip.inDiabet,
FRSH,FCGP,FIACM,FIMSA

சட்ட ஆலோசகர்கள்
**M. தாமோதரன்**
Senior-Cent. Govt. Standing Cousel
**S, ஜேம்ஸ் ஜெகநாதன்**, M.A.,M.L.
பூவை. **இலா. ரமேஷ்** B.A., B.L.

ஆசிரியர் குழு
**A. ராமையன்**
**S. சாகுல்ஹமீது, M.பழனி** BFA

நிருபர்கள் :
**S. முஹம்மது ரபீக், J.திலக்குமார்**
**P.N. ராஜா, S. அப்துல் அஜிஸ்,**
**C.P.செந்தில்குமார், S.முஹம்மது ஷரிப்**
**S.அப்துல்ரகுமான்,**
**R.ரகோத்தம்மன்**
**S.சௌந்தர்ராஜன்,** சேலம்
**G.செந்தில்குமார்** புதுக்கோட்டை
**K.ஐய்யனார், P.K.குமார்**

புகைப்பட நிருபர் :
**எத்திராஜ்**

வடிவமைப்பு
சீயோன் கிராஃபிக்ஸ்-9884571053

எண்.352, சாமந்திபுரம், வியாசர்பாடி,
சென்னை – 39. செல் : 9444406321



கண்காணிப்பாளன் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும்
சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.


# பெண்கள்...!

பெண்கள்தாங்க வீட்டிற்கும் நாட்டிற்கும் கண்கள். பெண்களை மதிக்கும் வீடும், நாடும் முன்னேற்றம் காண்பதில் பெருமளவு முன்னேற்றம் கண்டிருக்கிறது. பெண்களை இழிவு படுத்துவது என்பது கூடாது. ஏளனமும் அலட்சியத்தையும் பெண்களிடத்தில் காண்பிக்கக் கூடாது. பெண்கள் தான் சக்திமிகுந்தவர்கள். ஆண்களுக்கு 20 வயது வரைதான் செல்கள் உற்பத்தி, பெண்களுக்கோ 25 வயது வரை செல்கள் உற்பத்தி. இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம் பெண்களின் சக்தியை, எதனால் பெண்களை குறைவாக மதிப்பிட வேண்டும்? பூமித்தாய், பாரதமாதா என்றெல்லாம் பெண்களை போற்றும் வகையில் இருக்கும்போது பெண்களை மதிக்காது, அவர்களை கேவலப் படுத்துவது எந்தவித்திலும் நியாயமில்லை. ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண்கள் இருக்கிகறார்கள். ஒரு ஆண் என்பது வெறுமைதான்! ஆணும், பெண்ணும் என்பதே பெருமை! ஊக்க சக்தியும், ஆக்க சக்தியும் பெண்கள்தான். எந்தப் பெண்களும் கெட்டுப்போக நினைப்பதில்லை. சூழ்நிலையால் கெடுக்கப்படுகிறார்கள். இது அநீதியாகும். ஆவது மட்டும் பெண்களால் என்பதை கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எந்தளவுக்கு பெண்களை நாம் மதித்து போற்றுகிறோமோ அந்தளவுக்கு நமது முன்னேற்றம் எந்தவிதத்திலும் பாதிக்காது. சாதனைகள் புரிவதற்கு பெண்களின் துணை அவசியம். இனி வருங்காலங்களில் நாம் பெண்களை ஏளனம் செய்யாது, எள்ளி நகையாடாமல் பெண்களை மதித்து போற்றி வீடும், நாடும், உலகமும் செழித்து நலமாக, வளமாக இருக்க பெண்களை போற்றுவோம். பெண்களே உலகமகா சக்தி என்பதை உணர்வோம். இனி வருங்காலங்களிலாவது பெண்களை பாலியல், வன்கொடுமை, தேவையில்லாத சித்ரவதை, கட்டாயக் காதல் போன்ற துன்பங்களை கொடுக்காது, பெண்ணை மதித்து, போற்றி 2017 லிருந்தாவது நாட்டையும், வீட்டையும் காக்கும் பெண்களை மதித்து வாழ்வோம். எல்லோருக்கும் புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்களைக் கூற பெண்களைப் போற்றுவோம், பாதுகாப்போம் என உளமாற அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



**எஸ். கிருஷ்ணமூர்த்தி**
எண்.251, கல்யாணி இல்லம்,
செல்லப்பன் நகர்,
புதுக்கோட்டை - 622 001
செல் : 98428 51746





# அறிஞர் அண்ணாவின் நினைவலைகள்....

**பே**ரறிஞர் அண்ணா என அனைவராலும் அன்புடன் அழைக்கப் படுபவர் சி.என். அண்ணாதுரை, அழகிய அடுக்கு மொழியால் மக்களின் மனதில் எழுச்சியை ஏற்படுத்தியவர். இளைய சமுதாயத்தினரிடமும் பகுத்தறிவுச் சிந்தனையை துளிர்விடச் செய்தவர். அண்ணாவில் சொல்லும், சொல்லை வெளிப்படுத்தும் உத்திகளும், சொற்பொழிவாற்றும் முறையும் தனித்தன்மை உடையவை. சிறு வயதிலிருந்தே எழுத்திலும், பேச்சிலும் தனக்கென ஒரு பாதையை வகுத்துக் கொண்ட அவரது வாழ்க்கை வரலாற்றின் சுவாரசியங்களை பார்ப்போம்.

அறிஞர் அண்ணா பள்ளி, கல்லூரிக் காலத்தில் வகுப்பில் ஜன்னல் ஓரத்து இருக்கையில்அமர்ந்திருப்பார். ஒரு முறை நேரு தமிழகம் வந்திருந்த போது பள்ளிக்கூடம் ஒன்றிற்குச் சென்று உரையாற்றினார். நேரு ஆங்கிலத்தில் உரையாற்ற, மொழி பெயர்ப்பாளர் அதைத் தமிழில் மொழி பெயர்த்தார். ஒரு கட்டத்தில் நேரு, வேறு யாராவது மொழி பெயர்க்கிறீர்களா? எனக் கேட்டார். அப்போது அங்கிருந்த பள்ளி மாணவர்களில் ஒருவன் எழுந்து சென்று அவருடைய பேச்சை மொழிபெயர்த்தான். அந்த மாணவன்தான் அண்ணாத் துரை. பின்னாளில் அறிஞர் அண்ணாவாக உயர்ந்தவர்.

அறிஞர் அண்ணா தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் மிகுந்த புலமையுடையவர் என்று வெளிநாட்டுப் பத்திரிகைகள் எழுதின. அமெரிக்காவில் வெளியாகும் ஒரு பத்திரிகையின் நிருபர் அண்ணாவைப் பற்றி கேள்விப்பட்ட போது அவர் என்ன தான் ஆங்கிலம் அறிந்திருந்தாலும் மேல் நாட்டினர் அளவுக்குப் பேச முடியாது என்று எண்ணிக் கொண்டிருந்தாராம். அண்ணாவின் ஆங்கில உரைகள் மற்றும் பேச்சு நுட்பத்தை அறிந்த பிறகு தனது கருத்தை மாற்றிக்கொண்டு அவரும் பாராட்டி எழுதினாராம்.

என்னை காலண்டர் பார்க்க வைத்து சூழ்நிலைக் கைதியாக்கி விட்டதே இந்த முதலமைச்சர் பதவி என்று சொல்லிக் கொள்வார். அண்ணாவுக்கு நெசவு மற்றும் தையல் தொழில் நன்றாகத் தெரியும். என்னுடைய அளவுக்கு மீறிய பொறுமைக்கு இதுதான் காரணம். நூல் அறுந்துவிடக்கூடாது என்பதற்காக நெசவாளியானவன் எப்போதும் இப்படித்தான் கவனமாகவும், பொறுமையாகவும் இருப்பான் என்பார்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும், கத்தியைத் தீட்டாதே புத்தியை தீட்டு, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, மறப்போம், மன்னிப்போம், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு. மக்கள் தொண்டே மகேசன்தொண்டு ஆகிய பிரபலமான வாசகங்கள் அண்ணா

மேடைகளில் பேசிய உணர்ச்சிமிகுந்த பேச்சாகும்.

தனக்குக் கீழ் இருந்த கட்சித் தொண்டர்கள் தலைவர்களை நாவலர், கவிஞர், பேராசிரியர், சொல்லின் செல்வர், சிந்தனைச் சிற்பி, தத்துவ மேதை என்று பட்டம் சொல்லி அழைத்து வளர்த்து விடுவார்.

அண்ணா இறந்தபிறகு இவரது இறுதி ஊர்வலத்தில் திரண்ட கூட்டம் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. 1806 ல் பிரிட்டன் துணைத் தளபதி நெல்சன், 1907ல் எகிப்து குடியரசுத்தலைவர் கமால் அப்துல் நாசர் ஆகியோரின் இறுதி ஊர்வலத்தில் கூடிய கூட்டத்தை அடுத்து அதிகம் கூடியது அண்ணாவுக் குத் தான் என்று கின்னஸ் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

# கண்களைக் கூசவைத்த ஒளி



கோவிலில் நிறுவப்பட்டுள்ள பிஹார்ஜியின் உருவத்தை சுவாமி ஹரிதாஸ் என்ற மகானுக்கு தெய்வத் தம்பதிகளான ராதா கிருஷ்ணர் களே நேரில் அளித்ததாக நம்பப்படுகிறது. சுவாமி ஹரிதாஸ் உத்தரப் பிரதேசத்தில் ஒரு சிறிய கிராமத்தில் ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய மூதாதையர் கிருஷ்ணருக்கும் பலராமருக்கும் பெயர் வைக்கும் வைபவத்தில் வசுதேவர் அழைப்பில் பங்கேற்றவர்கள் என்று ஐதிகம்.

சுவாமி ஹரிதாஸ், லலிதா என்ற கோபிகையின் மறு அவதாரம் என்று கருதப் படுகிறது. அவர் திருமணமான பின்பு இல்வாழ்க்கையைத் துறந்து பிருந்தா வனத்திற்கு வந்து நிதிவன் என்ற அடர்ந்த துளசிக் காட்டில் தங்கியிருந்தார். ஹரி நாம ஸ்மரணையிலேயே மூழ்கியிருந்தார். அது ஒதுக்குபுற இடமாதலல் அவருடைய சீடர்கள் ஒரு நாள் அங்கே அவரைக் காண வந்தனர். அந்த இடம் ஒளி வெள்ளத்தில் இருந்ததால் அவர்கள் கண்கள் கூசின. கேள்விப்பட்டு அங்கே வந்த ஹரிதாஸ் இறைவனைக் காட்சி தரும்படி இறைஞ்சினார். கிருஷ்ணரும் ராதையுடன் அங்கே தோன்ற, எல்லோரும் மகிழ்ச்சியில் ஸ்தம்பித்துப் போயினர். அந்த அழகில் மெய்மறந்து சிலைபோல் ஆகினர். கோஸ்வாமிகளுக்கு வழிவரியாக அளிக்கப்பட கதைப்படி அந்த ஒளி மிகுந்த ஸ்வரூபத்தை மக்கள் காண முடியாது என்பதல் இருவரும் ஒருருவமாக மாற அச்சுதனை வேண்ட (மேகமும் மின்னலை போல) அவர்களும் அப்படியே மாறினர். அதுதான் இப்போது நாம் கோவிலில் காணும் கருப்பு நிற விக்ரகம் என்று சொல்லப்படுகிறது.

பிஹார்ஜிக்கு சேவை செய்ய ஜெகந்நாத கோஸ்வாமி என்பவர் அமர்த்தப்பட்டார். இன்றைக்கும் அவர் வழியில் வந்தவர்தான் அர்ச்சகர்களாக இருக்கிறன்றனர். முதலில் இந்த சுந்தர வடிவம் நிதி வனத்திற்கு அருகேயே ஒரு கோவிலில் வைக்கப்பட்டது. பிறகு பீஹாரிஜிக்கு ஏற்றவாறு 1856 ல் ஒரு கோவில் உருவானது. அப்போதிருந்த ராஜஸ்தானி பாணியில் உருவாக்கப்பட்ட இந்தக் கோயிலின் கட்டுமானத்தைக் கட்டிடக் கலையின் உன்னதம் என்று சொல்லலாம்.




# காரைக்குடிக்கு பெருமை சேர்க்கும் தமிழ்த்தாய் கோவில்

**செ**ம்மொழியாம் தமிழ் மொழிக்கு உலகின் எந்த மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்புகள் ஏராளம் உண்டு. அத்தகைய சிறப்பிற்கெல்லாம் கிகரமாய் விளங்குவது சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கம்பன் மணி மண்டபத்தில் அமையப்பெற்றுள்ள தமிழ்த்தாய் கோவிலாகும்.

உலகிலேயே மொழிக்கென்று உருவமும் கோவிலும், வழிபாடும் அமையப்பெற்ற மொழி தமிழ் மொழிதான்.

சுதந்திர போராட்ட வரலாற்றில் காரைக்குடி பகுதியில் கம்பன் அடிப் பொடி என்றழைக்கப்படும் சா.கணேச னாருக்கு தனிச்சிறப்பு உண்டு.

இளவயது முதலே தேசபக்தி மிகுந்திருந்த சா. கணேசனார் சுதந்திர போராட்டத்தில் பல்வேறு தீரச் செயல்கள் புரிந்து மக்களின் பேராத ரவை பெற்றார். இதனாலேயே பிரிட்டீஸ் அரசு இவரை கண்டதும் சுட உத்தரவிட்டது.

ஆனால், சா. கணேசனார் துணி விருந்தால் சுடுங்கள் என்று கூறி தான் அணிந்திருந்த சட்டையை கிழித்து வீசி மார்பை காட்டினார். அன்றி லிருந்து அவர் வாழ் நாள் முழுவதும் சட்டை அணியவே இல்லை.

பிற்காலத்தில் 1962 ம் ஆண்டிலி ருந்து 67ம் ஆண்டு வரை எம்.எல்.ஏ. வாகவும் 68 ம் ஆண்டில் இருந்து 74 ம் ஆண்டு வரை எல்.எம்.ஏ. ஆகவும் சா. கணேசனார் பணியாற்றினார்.

இறைபக்தியும், தமிழ் மீது மிகுந்த ஆர்வமும் கொண்ட சா. கணேசனார் கம்பர் மீது, அவரது படைப்பின் மீதும் மிகுந்த நேசம் கொண்டு 1939ம் ஆண்டு காரைக்குடியில் கம்பன் கழகத்தை தோற்றுவித்து கம்பனுக்கு விழா எடுத்தார்.

அரிய சிந்தனையும், ஆற்றலும் ஆக்கும் திறமையும் பெற்ற சா. கணேசனாருக்கு அன்னைத்தமிழ் மீது கொண்டு பற்றால் தமிழ்த்தாய்க்கு கோவில் எழுப்ப முனைந்தார். இவரை பற்றி நன்கு அறிந்த தமிழக அரசு, இவரது முயற்சியை பாராட்டி தமிழ்த் தாய் கோவிலை செல்வடிவாக்க ஒரு பகுதியினை நிதி உதவியாக அளித்தது.

அதனை தொடர்ந்து 23.4.1975 ல் அப்போதைய முதல்வராக இருந்த கருணாநிதியால் தமிழ்த்தாய் கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்பின் கம்பன் அறநிலையை சேர்ந்த தமிழ்ச்சான்றோர்களின் செயற்கரிய பணியினால் தமிழ்த்தாய் கோவில் கம்பீரமாக எழுந்தது.

முத்தமிழை குறிக்கும் முக்கோண மேடை மீது ஆறுபட்டை கருவறை அமைப்பை தமிழன்னை எழுந்தளியி ருக்கும் இடமாவும், நடுவறையில் தாமரை மலர் மீது நான்கு கரங்க ளுடன் தமிழ்த்தாய் வீற்றிருப்பது போலவும் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தாயின் வலப்புறம் அகத்தியரும், இடப்புறம் தொல்காப்பியரும் காட்சி தருகின்றனர். கருவறையில் வாயிலில் மொழியின் வரலாற்றை குறிக்கும் வகையில் வரித் தாய், ஒலித்தாய் என்ற இரண்டு சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கம்பன் மணி மண்டபத்திற்கு அமைக்கப்பட்ட தமிழ்த்தாய் கோவிலை 16.4.1993 ல் கருணாநிதி திறந்து வைத்தார். வருடம்தோறும் கம்பன் கழகத்தாரால் கம்பன் திருநாள் விழா கொண்டாடப்படும். அப்போது தமிழ்த்தாய்க்கு சிறப்பு செய்யும் நிகழ்வுகள் நடைபெறும்.

எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த போது மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தமிழ்த் தாய் சிலையினை திறக்க விரும்பினார். அதற்காக எம்.ஜி.ஆர். கேட்டுக்கொண்டதின் பேரில் காரைக்குடி தமிழ்த்தாய் கோவிலுக்காக உருவாக்கப்பட்ட தமிழ்த்தாய் சிலை மதுரை கொண்டு செல்லப் பட்டது. அச்சிலையே அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியால் திறக்கப் பட்டு இன்றும் மதுரையில் உள்ளது. அதன்பின் மீண்டும் தமிழ்த்தாய் சிலை வடிவமைக்கப்பட்டு காரைக்குடி தமிழ்த்தாய் கோவிலில் வைக்கப்பட்டது. இரு சிலைகளையும் உருவாக்கியவர் கணபதி ஸ்தபதி ஆவார்.

# இனிய (சோகமான) புத்தாண்டு 2017

தர்மம் தழைத்தோங்கிய புத்தாண்டு - 2016
சருகுகள் போல் உதிர்ந்து போனது இந்த புத்தாண்டு - 2017
மலர்போல் வந்தாய், புயல் போல் வீசினாய்
புன்னகையில் கவர்ந்தாய், மக்கள் மனதை - கொள்ளையடித்தாய்
இரும்பு மங்கையே, இந்தியாவின் மக்களை சோகத்தில் ஆழ்த்தி விட்டாயே

தர்மத்தின் குடையே இங்கு தலை சாய்ந்து விட்டது
நீதியும் நேர்மையும் மண்ணில் மறைந்து விட்டது
உண்மையான உழைப்பும், உயர்வும் உறங்கிவிட்டது
எண்ணற்ற மக்களின் எதிர்பார்ப்புகள் எங்கோ சென்றுவிட்டது
மக்களின் மனதை கவர்ந்த மணிமகுடம் தவறி விழுந்துவிட்டது
நாடு போற்றும் நல்ல உள்ளம் நழுவி போனது
எதிர்கால இளைஞர்களின் எண்ணங்கள் இருளாகிவிட்டது
மக்களின் கண்ணீரை துடைக்கும் சொந்தம் (அம்மா) சொர்கமாகிவிட்டது.
மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மங்கிபோய் விட்டது
கடமை தவறாத கண்ணியம் கட்டுப்பாடு காணாமல் போய்விட்டது
பார் போற்றும் பாரத தாயே உன்னை காண கண்கள்
ஆயிரம் வேண்டும்
பொதுமக்களின் பொக்கிஷமே (அம்மா) இந்த புத்தாண்டு
வருவதற்குள் புதைந்து போனாயே நீ புதைந்து போன
பிறகு இனி எங்களுக்கு (ஏது) எதற்கு இந்த
புத்தாண்டு 2017
கண்ணீர் மல்க



**சக்திவேல் அனிதா**
எம்.ஜி.ஆர். 2வது தெரு,
கொடுங்கையூர், சென்னை - 118

**1928** ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் நாள் அன்று மதிப்பிற்குரிய திரு. வெங்கடாசலம், திருமதி. ஆண்டாள் தம்பதியர்களுக்கு மகனாக பிறந்தவர் திரு. கே.வி. ராஜி அவர்கள். தனது 11 ஆம் வயதில் தந்தையை இழந்து, தாய், இரண்டு மூத்த சகோதரிகளுடன் வசித்து வந்தவர். ராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். பல ஆண்டுகள் கழித்து தன் வயதான தாயின் விருப்பத்திற்கு இணங்க, பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட சு. மகேஸ்வரி என்ற பெண்ணை மணம்முடித்த பின், சில ஆண்டுகளில் தன் ராணுவப் பணியிலிருந்து சென்னை ஆவடியில் உள்ள CVD Vehicles Dept ல் தனது பணியை தொடர்ந்தார்.

அன்பும், பாசமும் மிக்க பொறுப்புள்ள எனது தந்தை எனக்கு இறைவன் கொடுத்த

# சமர்பணம்



கே.சி.ராஜி

வரப்பிரசாதம். மனிதருள் மாணிக்கம் எனது தந்தை ஆவார். கோபப்படாத குணமுள்ள என் தந்தை சிலருக்கு கோமலியாக தெரிந்தாலும், பலர் இவரின் உயர்ந்த பண்புகளை மதித்தனர்.

## நினைவுகளின் சுருக்கம்

என் சிறு வயதில், ஒருமுறை என் தந்தை வெளியூருக்கு சென்றிருந்த போது விபரம் அறியாத நான் அழுத முகத்தோடு, கன்னங்கள் வீங்கி மன ஏக்கத்தோடு வாசலில் உட்கார்ந்திருந்தது இன்றும் பசுமரத்தாணி போல் நினைவில் உள்ளது.

மாலை வேலையிலிருந்து வரும் போது எனக்காக என் தந்தை அழகழகான பூக்கள் கொண்டு வருவார். நான் விரும்பி சாப்பிடும் ஸ்நாக்ஸ் தின்பண்டங்களை ஆசையோடு வாங்கி வந்து, என்னை சாப்பிடவும் வைப்பார்.

என் தந்தை சிகை அலங்காரம் செய்வதில் வல்லவர். வார விடுமுறை நாட்களில் பன்கொண்டை, கிருஷ்ணன் கொண்டை, நர்கீஸ் கொண்டை, என பல வடிவில் எனக்கு அலங்காரம் செய்து பூக்களை சூடி அழகு பார்ப்பார்.

என் பள்ளி பருவத்தில், தலைவாரி ஜடைபோட்டு, பள்ளி சீருடை அணிவித்து காலணிகளை பாலீஸ் செய்து, என் பள்ளி பை, என் தம்பி, தங்கையுடை பள்ளி புத்தகப்பை மூவருடைய லஞ்ச் பாக்ஸ் என்று எல்லாவற்றையும் தம் தோலில், கைகளில் சுமந்தபடி, எங்கள் மூவரையும் பிடித்துக்கொண்டு வீட்டிலிருந்து பள்ளி வளாகத்துக்குள்ளே வந்து, எனது வகுப்பு, அரையில் நான் உட்காரும் இடத்தில் என் ஸ்கூல் பேக்கை வைத்துவிட்டு, டாடா சொல்லிவிட்டு போவார். வேலையென்றால் இச்சுமைகளை என் அம்மா செய்வார்.

என் சீருடைகளை அயன் செய்வதும், எனக்கு சாதம் ஊட்டி விடுவதும் என் தந்தையே, இரவு சாப்பிடாமல் படுத்து விடுவேன். காரணம் தானாக சாப்பிட மாட்டேன். ஆனால், நேரம் கழித்து வந்தாலும், என்னை எழுப்பி சாதம் ஊட்டி விடுவார்.

உட்கார்ந்து தூங்கியவாரே சாப்பிடு வேன். தண்ணீர்கூட டம்ளரை தான் பிடித்துக் கொண்டு குடிக்க வைப்பார். என் திருமணத்திற்கு பிறகுதான் கையில் சாதம் அள்ளி சாப்பிடும் முறையை சிறிது சிறிதாக பழகிக் கொண்டேன்.

வீட்டிலேயே செடி, மரங்களைச் வளர்க்கும் பழக்கம் உடையவர் என் தந்தை. எனக்கு பிடித்த இளநீர், பாதம், முந்திரி இப்படி எல்லாமே உரித்து ஜாரில் ஸ்பூன் வைத்து சாப்பிடச் சொல்லி ஊட்டியும் விடுவார்.


மாம்பழம் பிடிக்கும் என்ற ஒரே காரணத்தால் என் தந்தை எனக்காக மாந்தோப்பிற்கு சென்று மூட்டை மூட்டையாக மாம்பழம் வாங்கிவந்து, அதையும் தோல் நீங்கி, சாப்பிடும் பதத்தில் கொடுப்பார்.

பாத்திரம் தேய்ப்பது, பம்ப் அடிப் பது, பக்கெட் தூக்கினால் கைகளில் காப்பு காய்ச்சிடும் என்று சொல்லி என்னை இதுபோன்ற வேலைகளை தொடகூட விட்டதில்லை. என் பாசமிக்க தந்தை.

நான் பன்னிரொண்டாம் வகுப்பு படிக்கும் போது, ஸ்கூல் டூர் சென்ற போது என்னை வழி அனுப்ப சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு வந்து என் தந்தை, பிறகு நான் பன்னிராண் டாம் வகுப்பு ஆசிரியையாக பணியாற் றியபோது, மகளுக்கு தாயாக ஆனபிறகும் என் தந்தை தான் ஸ்கூல் டூருக்கு என்னை வழியனுப்ப ரயில் நிலையத்திற்கு வந்தார். என் கணவர் கூட வரவில்லை. என்னுடைய 10, 12 ம் வகுப்பு பயலாஜ்ரிக்கார்டு பூக் படங் களை வரைந்து V. neat and V. Good என்று வாங்கச் செய்தார் என் தந்தை.

என் தந்தை சிறந்த ஓவியர், யோகாசன பயிற்சியாளர், நரம்பு நிபுணர், சித்தா மருத்துவ வைத்தியர், சிறந்த பாக்ஸர், பல திறமைகள் இருந்தாலும், தெய்வபக்தி, பண்பும் மிக்கவர். எளிமையாக வாழ்ந்தவர். ஒருமுறை பேசினாலே போதும் என் தந்தையை எல்லோருக்கும் பிடிக்கும்.

நான் ஆசைப்பட்ட அனைத்தை யும் செய்த என் தந்தை அவர் கடைசி காலம் வரை என்னிடம் கோபப் பட்டதே இல்லை. திட்டியதும் இல்லை. சபித்ததில்லை. பாசமிக்க என் அன்பு தந்தை தன் கடைசி காலத்தில் என் வீட்டிற்கு வர மிகவும் ஆசைப்பட் டார். வேகமாக ஓடும் குடும்ப சூழல்



காரணமாக, நேரமின்மை காரணமாக.. ஏதோ என் கடைசி காலம்வரை நான் அழுவதற்குகாரணம் இருக்க வேண்டும் என்றோ என்னவோ, என் தந்தையின் ஆசையை நிறைவேற்றாத பாவியாகிப் போனேன்.

என்றுமே என் தந்தைக்கு நான் ஒரு குழந்தையாகத் தான் தெரிந்திருக்கின் றேன். என் தந்தை ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாலும் கரப்பன் பூச்சியைக் கண்டு பயந்து அப்பா என சீண்டினால் போதும், விஜிமா என்று ஓடி வந்து உதவுவார்.

படுத்த படுக்கையாக இருந்த என் தந்தை என் குரல் கேட்டு எழுந்து உட்காருவார்.

தன் சுய நினைவை இழந்த நிலையிலும் தன்னை கவனிக்க வந்த நர்சை என் மகள் விஜிமா என்றுதான்

அழைத்தார். அம்மா, மாத்திரை சாப்பிடுங்க, வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன் என்று சொன்ன என் வார்த்தைக்கு செவி சாய்த்து, ஆ என்று மாத்தி ரையை விழுங்கினார்.

எனக்காக எல்லாவற்றையும் செய்த என் அன்பு தந்தை, என்னை பிரிந்திருக்க வேதனைப்பட்ட இவ்வுல கில் விஜிமா.. விஜிமா... என்று ஆசை யோடு அன்பு குரலில் அழைத்த என் தந்தையின் அழைப்புக் குரல் நின்று விட்டது. என் தந்தை என்னை தனியாக விட்டுவிட்டு விண்ணுலம் சென்றுவிட்டார். இறைவன் பாதம் சேர்ந்துவிட்டார் என் அன்பு தெய்வத் தந்தைக்கு என் நினைவுகளை, மரியாதையை, பாசத்தை கண்ணீர் மையால் எழுதுகிறேன்.

“தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை” என்பார்களே, ஆனால் என் தந்தை அன்றி என் மேல் உயிரான பாசம் வைக்க என் தந்தைக்கு ஈடாக யாரும் இல்லை இவ்வுலகில் எனக்கு!

என் அருகில் வந்து “விஜிமா” என்னை உன் வீட்டிற்கு அழைத்துப் போமா என்று கேட்ட என் தந்தையை அழைத்து வராததால் அவர் போகும் இடத்திற்கு என்னை அழைத்துப் போகாமல் சென்றுவிட்டாரே!

அன்று என் விலாசம் கேட்ட என்தந்தை, இன்று எனக்கு அவரின் விலாசம் தராமல் மறைந்ததை தாங்க முடியா வேதனையில் என் தந்தைக்கு சமர்ப்பிக்கும் நினைவு மடல்.

அன்பு மகள்

**பிரிஸ்சில்லா**

# அழிவுக்குணம் கொண்ட புயலே அழிக!

உயிர்த்துளி விட்டு
உயரமாய் மரம் வளர்த்தோம்!
வானைத் தொடும் அளவு
மகிழ்வுடன் அம்மரம் வளர்ந்துகொண்டு இருக்கையிலே-
வர்தாப் புயல்வந்து வேரோடு சாய்க்கையில்
இதயத்தில் இடி மழை!
அத்தனை மரங்களும் அடியோடு அழிந்தனவே!
அப்புயல்,உயிர் மரத்தை மட்டுமன்றி ஊருக்கு ஒளிவழங்கும் உயிரற்ற
மின்விசை மரங்களையும் ஒடித்துப்போட்டுவிட,ஊரே இருட்டில்
உதவியின்றி தவிக்கிறது!
புயல் வந்தால் மழையென்று பூரித்துப் பொறுத்திருந்த மக்கள் கூட்டம்
புயலால் அழிவேயென்று புலம்பிக் கதறுகின்றார்!
கோடை காலத்தில் வாடையாய் இருந்து குளிர்பதனம் செய்த கும்பல்
மரங்களையும் கொள்ளையடித்துச் சென்றது கொடும் புயல்!
இறைவனை நோக்கி எல்லா மக்களும் குழுவழிபாடு குறைதீர்க்கச்
செய்திடுவோம்!
புயலின் அழிவுக் குணத்தை அடியோடு மாற்றி ஆக்கக்
குணத்தை அதற்கு அளித்திடுவீர்!
குணமாற்றுச் சிகிச்சை கொடுக்க முடியவில்லையென்றால் உயிரில்லா
உலகுக்கு இப்புயல் ஓடி ஒளிய அருள்புரிவீர்!
எங்கள் வேண்டுகோளை இரக்கமுடன் கேட்டு இறைவா காப்பாற்றும்!
என்னாளும் வணங்கிவோம்!

அன்புடன்

**நாவேந்தன் முருகேசன்**

# ஜீரண உறுப்புகளும் உணவு செரித்தலும்

பசிக்கிறது சாப்பிடுகிறோம். அடுத்த நாள் நாம் சாப்பிட்ட உணவு கழிவுப் பொருட்களாக வெளியேறி விடுகிறது. இது எப்படி நடக்கிறது? நாம் சாப்பிட்ட பிறகு உணவை விழுங்கிய பிறகு உடலுக்குள் என்ன மாற்றங்களை அடைகிறது? என்பது பலருக்கும் தெரியாத விஷயம்.

இந்த விஷயத்தைத்தான் மருத்துவர்கள் உணவு ஜீரணமாதல் உட்கிரகிக்கப்படுதல். பிறகு உடலால் பயன்படுத்தப்படுதல், தேவையற்ற கழிவுப் பொருட்கள் வெளியேற்றப் படுதல் என்று கூறுகிறோம்.


இப்படி நாம் சாப்பிட்ட உணவை ஜீரணம் செய்வதற்காகப் பல்வேறு உறுப்புகள் இருக்கின்றன. இவற்றில் பல சுரப்பி நீரைச் சுரக்கின்றன.

இதனைச் சுரப்பு நீர் என்று கூறுகின்றோம். அதிலிருக்கும் ஜீரணத்திற்கு உதவும் பல்வேறு நொதிகள் இந்த ஜீரண நீரில் இருக்கும். உணவு வாய் வழியாகக் குடலில் பிரயாணம் செய்கின்றபோது ஜீரண நீர் சுரந்து உணவை ஜீரணிக்க உதவுகிறது. ஜீரண நீரில் இருக்கின்ற நொதிகள் உணவுப் பொருட்களுடன் வினை புரிந்து அவற்றை எளிதில் குடலால் உறிஞ்சி எடுத்துக் கொள்கின்ற அளவிற்குச் சிறுசிறு பொருட்களாகவும், கூழாகவும் மாற்றி விடும்.



பேராசிரியர்
டாக்டர் எஸ். முத்துசெல்லக்குமார் எம்.டி.

உணவை வாயில் போட்டுச் சுவைக்க ஆரம்பிக்கின்ற போதே அது ஜீரணக்கத் தொடங்கி விடுகிறது. வாயைச் சுற்றியும் நாக்கிற்கு அடியிலும் உமிழ் நீர் சுரப்பிகள் இருக்கும். இவை உணவை முதலில் பற்களால் கடித்துத் தரப்பட்ட உடன் அதை ஈரப்படுத்தும். உமிழ் நீர் அதிலிருக்கும் டையலின் அல்லது உமிழ்நீர் அமைலேஸ் என்ற என்ஸைம் உணவிலுள்ள ஸ்டார்ச் மற்றும் மாவுப் பொருட்களை ஜீரணிக்க உதவும். வாயில் குறைந்த நேரமே உணவு இருப்பதால் குறைந்த நேரத்திற்கே




இந்த ஜீரணமாகுதல் நடைபெறுகிறது. பிறகு, உருண்டையான இந்த உணவு நாக்கின் உதவியோடு பின் தள்ளப்படுகிறது. அப்போது, உணவு, மூச்சுக்குழயின் வழியாக உட்செல்லாதபடி சுவாச மேற்பகுதியை "குரல்வளை மூடி" மூடிக் கொள்ளும். இதனால் உணவு மூச்சுக் குழலின் உட்புகுவது தடுக்கப்படுகிறது.

பிறகு உணவு இரைப்பையை நோக்கிச் செல்லும். மேல் உண் குழல் வழியாக அது இரைப்பைக்குள் புகும்.

இரைப்பையில் இரைப்பை நீர் சுரக்கும். உணவு உள்ளே வந்தவுடன் இது அதிகமாக சுரக்க ஆரம்பிக்கும். இத்துடன் ஹைட்ரோ குளோரிக் அமிலம் சுரக்க ஆரம்பிக்கும். இதில் பெப்சின் மற்றும் ரெனின் என்ற இரண்டு நொதிகள் இருக்கும். பெப்சின் உணவிலிருக்கும் புரோட்டீன் சத்தைப் பெப்டைட்ஸ் என்ற பொருளாக மாற்ற உதவுகிறது. ரெனின் பாலை உறைய வைத்து


ஜீரணிப்பதற்கு உதவுகிறது.

இப்படி ஜீரணமான பின்பு உணவு இரைப்பையிலிருந்து சிறிது சிறிதாக சிறுகுடலின் மேற்பகுதியான 'டியோடினம்' என்ற முன்சிறுகுடல் என்ற பகுதியை அடைகிறது. உணவு இங்கு வந்தவுடன் பித்தப் பையிலிருந்து பித்தநீர் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். இந்த நீர் கல்லீரலால் சுரக்கப்படுகிறது. உணவில் கொழுப்புப் பொருட்களைச் சிறுசிறு பொருட்களாக மாற்றவும் அதில் பல்வேறு கணையத்திலிருந்து வரும் நொதிகள் செயலாற்றவும் உதவுகிறது. பித்தநீரில் எந்தவிதமான நொதிகளும் கிடையாது.

இதே நேரத்தில் கணையத்திலிருந்து கணைய நீர் சுரந்து அதுவும் சிறுகுடலின் மேற்பகுதியை அடைகிறது. அதில் மூன்று முககிய நொதிகள் இருக்கின்றன. அவை புரோட்டீயஸ், அமைலேஸ், லைப்பேஸ் என்பவை ஆகும்.

'புரோட்டீயஸ்' என்ற நொதியானது டிரிப்சின் என்றும் ஹைமோடிரிப்சின் என்றும் இரண்டாக உள்ளது. இவை, உணவிலிருந்துக்கும் புரோட்டீன் பகுதியை ஜீரணம் செய்து எளிதில் குடலால் உறிஞ்சி எடுக்கக்கூடிய அமினோ அமிலங்களாக மாற்றிவிடும். இதிலிருக்கும் லைப்பேஸ் என்ற நொதியானது உணவிலிருக்கும் கொழுப்பு பொருட்களை ஜீரணம் செய்து மோனோ கிளிசரைட்ஸ் மற்றும் கொழுப்பு அமிலங்களாக மாற்ற உதவுகிறது. உணவிலிருக்கும் சர்க்கரை மற்றும் மாவுப் பொருட்களை அமைலேஸ் ஜீரணம் செய்து மால்டோஸாக மாற்ற உதவுகிறது.

## எளிமையாக வாழ்ந்த ஷேக்ஸ்பியர்



உலகின் தலைசிறந்த நாடக ஆசிரியரான வில்லியம் ஷேக்ஸ்பியர் 1564 ல் இங்கிலாந்தில் ஸ்டிரர்போர்டில் பிறந்தார். இவரது தந்தையார் ஜான் ஷேக்ஸ்பியர், கையுறை தயாரித்து விற்பவராக இருந்தார். பின்னாளில் அவ்வூரின் மேயராகவும் உயர்ந்த அவர், பல முக்கியப் பொறுப்பு களையும் வகித்தார். ஜான் ஷேக்ஸ்பியர் - மேரி ஆர்டென் தம்பதி பெற்றெடுத்த எட்டுக் குழந்தைகளில் மூன்றாவது குழந்தைதான் வில்லியம் ஷேக்ஸ்பியர். அவர் தனக்கு 18 வயதானபோது, 26 வயதான அன்னே ஹாத்வே என்ற பெண்ணை மணந்தார். அவர்களுக்கு சூசன்னா என்ற பெண் குழந்தையும், ஜுடித், ஹாம்னெட் என்ற ஆண் குழந்தைகளும் பிறந்தன. பிரபல நாடக ஆசிரியராகப் புகழ்பெற்றாலும் ஷேக்ஸ்பியர் கடைசி வரை எளிமையாகவே வாழ்ந்தார். ஷேக்ஸ்பியரின் வீடு 1847 ல் அரசாங்கத்தால் நினைவிடமாக மாற்றப்பட்டது.

கண்காணிப்பாளன்
மாத இதழ்
எண்.352, சாமந்திபூ காலனி,
வியாசர்பாடி, சென்னை – 600 039
செல் : 9444406321 , 9884199387

வங்கி விவரங்கள்

| | |
|---|---|
| வங்கி | – Purasawalkam Co-operative Bank Ltd |
| கிளை | – MKB Nagar |
| எண் | – 34103020000106 |
| கணக்கு | – Current Account |
| தலைப்பு | – Kankanippaalan |
| மின்னஞ்சல் | – kkpnmagazine@gmail.com |










# ஸ்ரீ அன்னதான பிரபு ஐயப்பன் பக்த ஜனசபா

எழில் நகர், சென்னை-118

10ம் ஆண்டு மலர் பூஜை விழா கடந்த 18.12.2016 அன்று பகல் 12 மணியளவில் பூஜை நடைபெற்றது.

இதில் மாண்புமிகு நீதியரசர் டாக்டர் டி.என். வள்ளிநாயகம் (லோக் அதலாத் சென்னை உயர்நீதிமன்றம்) அவர்கள் அன்னதான நிகழ்ச்சியை துவக்கிவைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக காவல் துறை டி.எஸ்.பி. எஸ். மேககுமார், லெப்ட்ரனல் கர்னல் டி. ஜெயராஜ், (ஆர்மி ஓய்வு), ஜெ.ஜெ.மோகன், எஸ்.மோகன், இ. செல்வராஜ், வழக்கறிஞர் இல.ரமேஷ், என். பச்சையப்பன், டாக்டர் எம்.விமல், எம். பழனி, எம்.டி.இளங்கோவன், வழக்கறிஞர் எஸ். சுஜாதா, முகம்மது ரபீக், துளசி பன்னீர்செல்வம், சட்ட ஆலோசகர் ஐயப்பா வெங்கடேசன், கே. கிருஷ்ணமூர்த்தி எழில் நகர் ஊர் தலைவர், பி.என். ராஜா, பி.கே. ஜோதி பிரியன், ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

















இரங்கல் அஞ்சலி




இரங்கல் அஞ்சலி

Owned & Published by E. Selvaraj from No.352, Sammanthipuram, Vyasarpadi, Chennai - 600 039, and Printed by R. Gani (N. Rowthargani), at Fine Offset Prints, No. 15, Seven Wells Street, Ch - 600 001, Editor E. Selvaraj, Cell : 94444 06321

Registered with Registrar of News Paper of India Under No. TNTAM/2002/7759
R.Dis.No. 876/07 Posted at Egmore RMS/R.No. TN/CCN/334/2017-2019.
WPP Licence No. TN/PMG/(CCR)/WPP-346/2017-2019
Published on 1st day of every month    Posted on 7th & 9th day of Every Month

